3rd November 1966]

மணிலாப்பயிருக்கு வரி

* 361 கேள்வி.—திரு. எஸ் ஜே. ராமசாமி: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுக்காவில் உள்ள மணிலா மார்க்கெட்டிங் சொசைட்டி, இந்த ஆண்டு மார்ச்சு மாதத்திலிருந்து இன்றுவரை விவசாயிகளிடமிருந்து மணிலாப் பயிருக்கு வரியாக (செஸ்) வசூலித்துள்ள தொகை எவ்வளவு?

(இ) இது குறித்து, மேற்படி சொசைட்டிக்கு அரசாங்கம் ஆணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) தமிழ்நாடு 1959-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் சந்தைகள் சட்டத்தின்படி வேர்க்கடலை வணிகர்களுக்கு மட்டுமே செஸ் விதிக்கப்படவேண்டும். வேர்க்கடலை பயிரிடுபவர்களுக்கு இந்த வரி விதிக்கப்படுவதில்லை. எனவே, வட ஆர்க்காடு சந்தைக்குழு அரக்கோணம் தாலுக்காவில் வேர்க்கடலை பயிரிடுபவர்களிடமிருந்து செஸ் வாங்கவில்லை.

(இ) இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: அரக்கோணம் தாலுக்காவில் செஸ் வாங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அங்கே செக் போஸ்ட் இருக்கிறது. அந்த செக் போஸ்டில் வண்டிகளை மடக்கி செஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி விவசாயிகளிடமிருந்து செஸ் வாங்குவது முறையா?

கனம் திரு. பூ. கக்கன்: வேர்க்கடலை உற்பத்தி செய்கிறவர்களிடமிருந்து செஸ் வாங்குவதில்லை. வியாபாரிகளிடமிருந்துதான் செஸ் வாங்குகிறார்கள். வியாபாரிகள் வாங்கும் போது அங்கு செஸ் கொடுத்துத் தீர வேண்டும். வியாபாரிகளிடம் தான் செஸ் வாங்கப்படுகிறதே தவிர, பயிரிடும் விவசாயிகளிடமிருந்து செஸ் வாங்குவதில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: விவசாயிகள், கடலையை உடைத்துப் பருப்பாக்கிக் கொண்டு மார்க்கெட்டுக்கு எடுத்துக்கொண்டு போகும்போது, வண்டியை மடக்கி செஸ் வாங்கிவிடுகிறார்கள். அரக்கோணம் மணிலா மார்க்கெட்டிங் சொஸைட்டி செஸ் வாங்கியிருக்கிறதா? அப்படி வாங்கி இருந்தால், இனிமேலாவது வாங்கக் கூடாது என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: அப்படி வண்டியை மடக்கி எங்காவது செஸ் வாங்கினார்கள் என்றால், கனம் அங்கத்தினர் குறிப்பாக எழுத்து மூலம் எனக்குத் தெரிவித்தால், அதைப்பற்றி விசாரிக்கலாம்.

ஏரிகளை ஆழப்படுத்த அபிவிருத்தி வரி

* 362 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏரிகளை ஆழப்படுத்தும் திட்டத்தில் பெட்டர்மெண்ட் டாக்ஸ் கட்டவேண்டுமென்று முறை வகுக்கப்பட்டிருக்கிறதா?